# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**22.10.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## மாநில செய்திகள்

### 1. சென்னையில் சாலை விபத்து உயிரிழப்பு 12.5% குறைந்துள்ளது

- சென்னையில் சாலை விபத்து உயிரிழப்பு 12.5 சதவீதம் குறைந்துள்ளதாக பெருநகர காவல் துறையின் போக்குவரத்து பிரிவு கூடுதல் ஆணையர் **கபில்குமார் சி.சரத்கர்** தெரிவித்தார்.
- **மோட்டார் வாகன சட்ட திருத்தம் 2019** இன் படி உயர்த்தப்பட்ட அபராத தொகை, சென்னையில் இம்மாதம் 28ஆம் தேதி முதல் வசூலிக்கப்படும்.
- **புதிய கருவி**:
  - மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுபவர்களை **'பிரீத் அனலைசர்'** கருவி மூலம் கண்டுபிடிக்கிறோம்.
  - ஆனால், தற்போது கஞ்சா, போதை மாத்திரை பயன்படுத்திவிட்டு பலர் வாகனம் ஓட்டி வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.
  - பரீத் அனலைசர் கருவி மூலம் அதை கண்டுபிடிக்க வசதி இல்லை.
  - எனவே, கஞ்சா, போதை மாத்திரை பயன்படுத்துவோரை பிடிக்க புதிதாக வேறு கருவி பயன்படுத்துவது தொடர்பாக ஆலோசித்து வருவதாக கூறினார்.

## மத்திய செய்திகள்

### 1. 'சித்ரங்' புயல்

- இந்த புயல், **ஒடிசாவை தாக்கும்** என்று எதிர்பார்க்கப்பட்டது.
- ஆனால் ஒடிசாவை தவிர்த்து விட்டு **மேற்கு வங்காளத்தை** நோக்கி நகரும் என்று தெரிகிறது.

### 2. இம்ரான் கான் தகுதி நீக்கம்

- தன்னிடம் இருந்த விலையுயர்ந்த வெளிநாட்டு பரிசுப் பொருள்களை வேட்பு மனுவில் குறிப்பிடாமல் மறைத்த குற்றத்திற்காக, பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் **இம்ரான் கானை** ஐந்தாண்டுகளுக்கு தகுதி நீக்கம் செய்து அந்த நாட்டு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.
- அதையடுத்து தற்போதுள்ள எம்.பி. பதவியை அவர் இழந்துள்ளதுடன், இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு நாடாளுமன்றத்துக்கோ, மாகாண பேரவைகளுக்கோ நடைபெறும் **எந்த தேர்தலிலும் அவர் போட்டியிட முடியாத** நிலை ஏற்பட்டுள்ளது.

### 3. நாளை விண்ணில் பாய்கிறது ஜிஎஸ்எல்வி எம்-3

- பிரிட்டனின் 36 செயற்கை கோள்களுடன் ஜிஎஸ்எல்வி எம்-3 கனரக ராக்கெட்டை விண்ணில் செலுத்துவதற்கான பணிகள் நிறைவடைந்துள்ளதாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு இஸ்ரோ தெரிவித்துள்ளது.
- வணிக பயன்பாட்டுக்காக செயல்படுத்தப்பட உள்ள திட்டமானது இஸ்ரோவின்

'நியூ ஸ்பேஸ் இந்தியா நிறுவனம்' மற்றும் பிரிட்டனின் **'ஒன் வெப்'** நிறுவனம் இடையே மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்படுகிறது.

- ஜிஎஸ்எல்வி **மார்க்-3 ராக்கெட் 43.5 மீட்டர் உயரமும், 640 டன்** எடையும் கொண்டது.
- அதனை வடிவமைக்கும் பணிகளும், செயற்கைக்கோள்களை நிறுவும் பணிகளும் நிறைவடைந்துள்ளன.
- உலகின் முன்னணி தொலைத்தொடர்பு நிறுவனங்களில் ஒன்றான ஒன் வெப் நிறுவனமானது அரசு, வர்த்தகம், கல்வி பயன்பாட்டுக்கான தொலைத்தொடர்பு சேவைக்காக இந்த செயற்கைக்கோள்களை அனுப்பவிருக்கிறது.
- இந்தியாவின் **பார்தி தொலைதொடர்பு சேவை நிறுவனமானது** ஒன் வெப் நிறுவனத்தின் முக்கிய பங்குதாரராகவும், முதலீட்டாளராகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## 4. கருப்பு பட்டியலில் இருந்து பாகிஸ்தான் நீக்கம்

- பயங்கரவாதத்துக்கு நிதியுதவி அளிப்பது மற்றும் பண பரிவர்த்தனை மோசடி தொடர்பாக கண்காணிக்க சர்வதேச அளவில் அமைக்கப்பட்டுள்ள நிதி நடவடிக்கை பணி குழுவின் **(எஃப்ஏடிஎஃப்)** கருப்பு பட்டியலில் இருந்து பாகிஸ்தான் நீக்கப்பட்டுள்ளது.
- பயங்கரவாதத்துக்கு நிதி உதவி கிடைப்பதை தடுக்க போதிய நடவடிக்கை எடுக்காததன் அடிப்படையில் கடந்த நான்கு ஆண்டுகளாக கருப்பு பட்டியலில் பாகிஸ்தான் வைக்கப்பட்டு இருந்த நிலையில், தற்போது அந்த பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.
- அதுபோல, **நிகராகுவாவும்** கருப்பு பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.
- அதே நேரம், இந்த கருப்பு பட்டியலில் **மியான்மர்** முதல் முறையாக வைக்கப்பட்டுள்ளது.
- **காங்கோ, தான்சானியா, மொஸாம்பிக்** ஆகிய நாடுகளும் கருப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- ராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு வரும் ரஷ்யா, எஃப்ஏடிஎஃப் அமைப்பின் வருங்கால ஆய்வுத் திட்டங்களில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது.
- கருப்பு பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருப்பதன் மூலமாக **சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்) உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்டவைகளிடமிருந்து நிதி உதவியை** பெறுவதற்கான முயற்சியை பாகிஸ்தான் மேற்கொள்ள வாய்ப்புள்ளது.